**தனமன்வில பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 18 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தனமன்வில பிரதேச சபையின் நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் பற்றாக்குறையான ரூபா 3,133,817 தொகை பேரேட்டில் திரண்ட நிதியக் கணக்கில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செவனகல உப அலுவலகக் காணியும் கட்டிடமும் மற்றும் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தை நடாத்திச் செல்லும் காணியும் கட்டிடமும் மீளாய்வாண்டின் போதும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) நூலகப் பயன்பாட்டுப் பதிவேட்டின் பிரகாரம் 689 புத்தகங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 6,126,616 தொகை கணக்கில் ரூபா 4,667,983 ஆகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதன் படி ரூபா 1,458,633 தொகை குறைவாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

07 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் படி, மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 67,559,705 ஆக இருந்ததுடன் பதிவேடுகளின் படி மீதி ரூபா 2,422,337 ஆக இருந்தது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய உள்ளூராட்சி ஓய்வூதியப் பங்களிப்புப் பணத்தின் மீதி ரூபா 62,620 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அந்த மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1995-1999, 2001-2007 மற்றும் 2011-2012 ஆம் ஆண்டுகளுக்காக செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 293,531 தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கிடைக்க வேண்டிய கணக்குகள்

17 உத்தியோகத்தர்களிடமிருந்து பல வருட காலமாக அறவிடப்படாது காணப்பட்ட ரூபா 125,704 தொகையான ஊழியர் கடனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 8,287,926 கூட்டுத்தொகையான 02 சொத்து விடயங்களையும் ரூபா 49,586,756 தொகையான 04 பொறுப்பு விடயங்களையும் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,262,570 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,276,411 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளின் தேறிய அதிகரிப்பு ரூபா 2,986,159 ஆக இருந்தத.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வாடகை வருமானம்

தனமல்விலை பொது மலசலகூடம், கிரிஇப்பன்வெவ நாற்று மேடை, டங்கும மாட்டிறைச்சிக் கடை மற்றும் தனமல்வில மாட்டிறைச்சிக் கடை போன்ற சபையின் ஆதனங்களை மீளாய்வாண்டின் போதும் வாடகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 152(i) ஆம் பிரிவின் பிரகாரம் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டண அளவு தீர்மானிக்கப்பட்டு வருடாந்தம் வர்த்தமானியின் மூலம் பகிரங்கப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 ஏனைய வருமானம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் செயற்பாடுகளுக்காக இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட அல்லது அதிகாரசபை அங்கீகரிக்க சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற 01 ஹோட்டேல் மற்றும் 01 தங்குமிடத்திடமிருந்து உரிய ஆண்டிற்கு முன்னைய ஆண்டின் பெறுவனவுகளிலிருந்து ஒரு சதவீதத்தை விஞ்சாத கட்டணமொன்றை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்ற தண்டப்பணம் | 1,834,047 |
| முத்திரைக் கட்டணம் | 86,450 |

**2.5 மிகை அறவீடு**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்புவாய்ந்தவர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை அறவீடுகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 672,220 தொகை அறவிடவேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை**

(அ) சபைக்குச் சொந்தமான 05 வாகனங்களின் மைலோ மீற்றர் செயற்படாமையால் ஓடிய தூரம் மற்றும் பயன்படுத்தப்பட்ட எரிபொருள் அளவு தொடர்பான சரியான தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான பாவனைக்கு எடுக்கமுடியாத 03 வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அது தொடர்பாக சனாதிபதி செயலாளரின் 2013 யூன் 05 ஆந் திகதிய பீசீஎம்டீ/பீஆர்/2013 ஆம் இலக்க கடிதத்தின் எற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் ஆண்டின் உள்ளபடியான வருமானம், செலவினம் என்பவற்றிற்கிடையே காணப்படுகின்ற கவனத்திற் கொள்ளக்கூடிய முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினக் கட்டுப்பாட்டின் போது பாதீடு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்